1971 டிசம்பர் 17]

இணைப்பு-2

254 -ம் பக்கத்தில் 531-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

* * *

(பொருள் : உவர் நிலங்களை பண்படுத்துவதற்கான திட்டம்)

* * *

(அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர், தருமபுரி மாவட்டங்களில் உவர் நிலங்களைப் பண்படுத்துவதற்காகக் கீழ்க்காணும் இரு திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன—

1. கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு வட்டத்தைச் சேர்ந்த ஈஞ்சம்பள்ளி, எழுமாத்தூர் ஆகிய கிராமங்களில் உள்ள உவர் களர், சதுப்பு நிலங்களைப் பண்படுத்துவதற்கான திட்டம்.

மேலே மூடப்படாத திறந்த வடிகால்கள் வெட்டுவதன் மூலம் நிலத்திற்கடியிலுள்ள அதிகப்படியான நீரை வடிகட்டுவதும், அதிக அளவில் களிக்கல்லைப் போடுவதன் மூலமும், இன்னீரை அதிக அளவில் விடுவதன் மூலமும் நிலத்தில் அதிகமாக உள்ள உப்புச்சத்தினை உறிஞ்சி எடுப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், ஈரோடு வட்டத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட கிராமங்களில் 1—9—1969-லிருந்து செயற்படுத்தப்படுகிறது.—

1. ஈஞ்சம்பள்ளி.
2. எழுமாத்தூர்.
3. அவல் பூந்துறை.
4. வடமுகம் வெள்ளோடு.
5. தென் முகம் வெள்ளோடு.
6. பழமங்கலம்.
7. துய்யம்பூந்துறை.
8. காகம்.
9. விளக்கேத்தி, இப்பணி அவசியமாயுள்ள ஏனைய கிராமங்கள்.

இப்பகுதிக்கான நில அளவை, திட்டங்கள், மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி 31—3—1970 வரை மேற்கொள்ளப்பட்டது. 1970-71-ல் 65 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டது. 1971-72-ல் 35 ஏக்கரைப் பண்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், சுண்டைக்குப்பம் கிராமத்திலுள்ள உவர் களர், சதுப்பு நிலங்களைப் பண்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம்.

சதுப்பு, உவர் களர் நிலங்களைப் பண்படுத்துவதால் ஏற்படுகின்ற பயன்களை உழவர்களுக்குச் செய்முறையில் விளக்கிக் காட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், சுண்டைக்குப்பம் கிராமத்தில் உள்ள 100 ஏக்கர் நிலத்தில் 1969 டிசம்பரில் கட்புல விளக்கத் திட்டம் தொடங்கப்பட்டது. வடிகால் வாய்க்கால்கள் வெட்டுதல் களிக்கல்லைப் போடுதல், இன்னீரை அதிக அளவில் சேர்த்தல் ஆகியவற்றின் வாயிலாக கட்புல

விளக்கப் அதிகமாக உள்ள உப்புச் சத்தினை உறிஞ்சுதல் போன்ற முறையான கட்டுல விளக்கப்பணி 1970-71-ல் மேற்கொள்ளப்பட்டு, 100 ஏக்கர் நிலத்தில் நிறைவேற்றப்பட்டது. முன்னரே செய்யப்பட்ட பணி 1971-72-ல் பேணப் பட்டு வருகிறது.

(Subject.—Scheme for reclamation of saline lands).

(*a*) Yes sir.

(*b*) The following two schemes are under implementation for the reclamation of saline lands in Coimbatore and Dharmapuri districts.

(i) *Scheme for reclamation of saline, alkali and water logged lands in Enjampalli, Elamathur, etc., villages of Erode taluk in Coimbatore district.*

The object of the scheme is to drain the excess water in the sub-soil profile by excavating open drains and also to leach the harmful salts by liberal application of soil amendments like gypsum and good fresh water. This scheme is under implemention from 1st September 1969 in the following villages of Erode taluk.

1. Enjampalli.
2. Elamathur.
3. Avalpundurai.
4. Vadamugham Vellode.
5. Thenmugham Vellode.
6. Palamangalam.
7. Thuyampundarai.
8. Kagam.
9. Villakethi and other villages where the work is found necessary.

Survey and preparation of plans and estimates for the area was done till 31st March 1970. During 1970–71, an area of 5 acres was reclaimed. During 1971–72, it is proposed to reclaim an area of 35 acres.

(ii) *Pilot scheme for reclamation of Saline, Alkali and water logged lands in Sandakuppam villages in Krishnagiri taluk of Dharmapuri district.*

The object of this scheme is to demonstrate to the ryots the benefits of reclamation of water-logged, saline and alkali lands. The demonstration project was started in December 1969 in an area of 100 acres in Sundakuppam village in Krishnagiri taluk, Dharmapuri district. Regular demonstration work like excavation of drainage channels, application of soil amendments like sypsum and leaching out the deleterious salts by flooding the land with fresh water was taken up during 1970–71 and completed in the 100 acres plot. During 1971–72 maintenance of the work already done is being attended to.